**நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் , சென்னை–28**
**முன்னிலை– திரு பா.பொன்னையா, இ.ஆ.ப.,**

**ந.க.எண். 16118/2022/CFC-1** **நாள்.28. 01.2023**

**பொருள்:** திருவத்திபுரம் நகராட்சி–15வது நிதிக்குழு மான்யம் 2022–23ஆம் ஆண்டிற்கான Tied Grant நிதி– ஒதுக்கீட்டின் கீழ் வாகனங்கள் கொள்முதல் செய்து கொள்ள நிர்வாக அனுமதி –வழங்குவது – தொடர்பாக.

**பார்வை:** நகராட்சி ஆணையர், திருவத்திபுரம் அவர்களின் பணி விவரப்பட்டியல்

***********

**ஆணை:**

பார்வையில் காணும் பணி விவரப்பட்டியலில், திருவத்திபுரம் நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2022–23 ஆம் ஆண்டிற்கான Tied Grant தொகையில் பின்வரும் வாகனங்கள் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வழங்குமாறு நகராட்சி ஆணையர், திருவத்திபுரம் அவர்களால் கோரப்பட்டுள்ளது.

| வ எண் | வாகனங்களின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Supply and delivery of 10 No's of Battery Operated Vehicle (Lithum) with one year O &M by supplier | 19.75 |
| 2 | Supply and delivery of 2 No's of Light Commercial tipper Vehicles with one year O&M by supplier | 14.60 |
| | **Total** | **34.35** |

எனவே, 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2022–23 ஆம் ஆண்டிற்கான Tied Grant-ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையில் மேற்காணும் வாகனங்களை கொள்முதல் செய்து கொள்ள நகராட்சி ஆணையர், திருவத்திபுரம் அவர்களுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளி கோரும்போது பின்வரும் விதிமுறைகளை பின்பற்றவும் அறிவுறுத்தப்படுகிறது.

1. மேற்காணும் வாகனங்களை கொள்முதல் செய்வதற்கு நிலையான விலை விவரப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விலையையே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். மேலும் விலை விகிதமானது gem rate அல்லது உள்ளூர் சந்தை விலை விகிதம் இரண்டில் எது குறைவோ அதனை எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். மிகையான விலையில் கொள்முதல் செய்யப்படக்கூடாது.

2. மேற்காணும் வாகனங்கள் கொள்முதல் செய்துக் கொள்ள தகுதி வாய்ந்த அதிகாரியிடம் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட வேண்டும்.

3. ஒப்பந்ததாரர் நியமனம் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000ஐ பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/–பா.பொன்னையா
**நகராட்சி நிர்வாக இயக்குநர்**

**பெறுநர்**

நகராட்சி ஆணையர்,
திருவத்திபுரம்
**நகல்**

1. இவ்வலுவலக தலைமைப்பொறியாளர், கண்காணிப்புப்பொறியாளர், இணைஇயக்குநர் (திட்டம்), உதவிசெயற்பொறியாளர், உதவிப்பொறியாளர்
2. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

28.1.23
**இணை இயக்குநர்(திட்டம்)**

28.01.23